1981 பிப்ரவரி 6]

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர் முன்னாள் ஆளும் கட்சியைச் சேர்ந்த அவைத் தலைவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. கேள்விதான் கேட்க வேண்டும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, ஈரோடு மாவட்டத்தின் துணை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ஆம் நாளன்று பார்வை யிட்டிருக்கிறார்கள். அங்கே ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் அதிலே ஒரு கட்டிடத்தையே கட்டி இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நூலகங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டிடங்களிலேயே நடத்தப்படுகின்றன. ஆகவே அரசாங்கம் சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டங்கள் ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, நூலகத் துறையினுடைய நிதியாதாரங்களைப் பொறுத்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம்.

கோவை சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி.

*வினா எண் 167—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரம், முதல் வார்டு சித்தாபுதூர் மேல் நிலைப் பள்ளியில் மாணவிகள் எண்ணிக்கை சுமார் 800 ஆகி விட்டதால் பிரித்து பெண்கள் பள்ளி தனியாக ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

(இ) கோவை நகராட்சி அதற்கனுமதி கோரியுள்ளது ஏற்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (ஆ) மற்றும் (இ): சித்தாபுதூர் நகராட்சி மேல் நிலைப் பள்ளியில் பயின்ற மாணவிகளை தனியாகப் பிரித்து நகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி 1980—81 கல்வியாண்டில் துவங்க கோயம்புத்தூர் நகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசாணை நிலை எண் 1406, கல்வி, நாள் 25—7—1980-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அந்த ஆணைவெளிடப்பட்டுள்ளது என்று சொன்னார்கள் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பிரித்து தனியாக நடத்துவதற்கான உத்தரவு கல்வி இயக்குநரிடத்திலிருந்து வந்து இப்போது அந்தப் பள்ளிக்கூடம் பிரிக்கப்பட்டு பக்கத்தில் இருக்கின்ற ஒரு ஆரம்பப் பள்ளியின் கட்டிடத்திலே நடக்கின்றது. அப்பள்ளிக்குரிய தலைமை ஆசிரியை மற்றும் வேறு பல ஊழியர்கள் இன்னும் நியமிக்கப்படாமல் இருக்கின்ற நிலைமை இருப்பதால் மிகவும் கஷ்டமாக அந்தப் பள்ளிக்கூடம் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. ஆகவே அதற்கு தலைமை ஆசிரியையை விரைவில் நியமிப்பதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர் களே, அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அது குறித்த நடவடிக்கையை எடுத்து அந்தப் பள்ளிக்கூடம் வெற்றிகரமாக நடைபெறுவதற்குரிய அளவில் ஏற்பாடு செய்ய இருப்பது குறித்து நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் வேறொரு ஆரம்பப் பள்ளியின் கட்டிடத்தில் தற்போது இயங்கி வருவதால் அங்கே இருக்கின்ற மத்திய சிறைக்குச் சொந்தமான காலியாக இருக்கின்ற இடங் களைப் பள்ளிக்கென்று தரவேண்டும் என்று முனிசிபல் நிர்வாக மும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. ஆகவே அந்த இடத்தைக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

(முற்பகல் 9—10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இது உள்துறை அமைச்சரிடம் கேட்டுச் செய்ய வேண்டிய காரியம். அதனால் அவரிடம் கேட்டு பின்னர் நடவடிக்கை எடுக்க முயலலாம்.

1981 பிப்ரவரி 6]

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே நகராட்சியிலே செல்வபுரம் பக்கத்தில் மிகவும் ஜனநெருக்கடி அதிகம். அங்கே 2,000-க்கும் மேற்பட்ட பிள்ளைகள் ஒரே ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். ஆகவே அந்தப் பள்ளியை விரிவு படுத்தும் விதமாகவும், நெரிசலைத் தவிர்க்கவும், மற்ற பகுதிகளில் அதே போன்று ஆரம்பப் பாடசாலைகளை அமைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் அரசு ஆலோசிக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி என்னைக் கேட்க அனுமதிக்க வேண்டும்.

Without headmistress, a school is going on. That is why I am putting another question.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது, தலைமை ஆசிரியரை நியமிப்பதற்கான உத்தரவு போடப்பட்டிருப்பதாக சொன்னார்கள். படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத ஆசிரியர்கள் நிறைய பேர்கள் இருக்கும்போது, அவர்களை அப்பாயின்ட் செய்வதில் அரசுக்கு என்ன கஷ்டம் இருக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரிடையாகவும் யாரையும் அரசு நியமிப்பது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 201, 202, 203 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

சேலம் இரும்பாலைத் திட்டத்தின் கீழ் மாற்று இடங்கள்.

*வினா எண் 204—செல்வி பி. விசயலட்சுமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் இரும்பாலைக்கென குடியிருந்தவர்களைக் காலி செய்து மாற்று இடம் கொடுக்கப்பட்டவர்களுக்கு இதுவரை அவற்றிற்கென பட்டா வழங்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?